## வானவில் கலையகம்

உங்கள் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் அதி உயர் தொழில்நுட்பத்தில் வீடியோ படம் பிடித்திடவும் போட்டோ அல்பம் தயாரித்திடவும்

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internetமுலம் உங்கள் இல்ல நிகழ்வுகள் , ஆலய நிகழ்வுகள் எதுவானாலும் அதி உயர் தரத்தில் நேரடியாக (LIVE TLECAST) முலம் பார்த்து மகிழ்ந்திடவும்

தொடர்பு கொள்ளுங்கள்

**வானவில் கலையகம்**

இல 330, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தி)
யாழ்ப்பாணம்
0212229466 , 0772487550
www.vanavilstudio.com



10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 67 திங்கட்கிழமை ஜுலை 17 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48


## வல்லையில் துப்பாக்கி மகஸின்கள் மீட்பு



வல்லைப்பாலத்துக்கு அருகாமையில் உரைப்பை ஒன்றினுள் இருந்து 70இற்கும் மேற்பட்ட துப்பாக்கி மகஸின்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது குறித்து பொதுமக்கள் சிலரால் நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், அவை இன்று காலை மீட்கப்பட்டுள்ளன. குறித்த மகஸின்கள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (எ-11)



## மின் கம்பத்துடன் மோதி மினி பஸ் விபத்து!

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி - மீசாலை புத்தூர்ச் சந்தி அருகில் மின்கம்பத்துடன் மோதி மினி பஸ் வித்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வீதியருகில் நின்றிருந்த இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மடத்தடி சாவகச்சேரியைச் சேர்ந்த 24 வயதுடைய பேரின்பநாயகம் லதீசன் என்ற இளைஞரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மினி பஸ்ஸை சாரதி அல்லாத பிறிதொருவர் இயக்க முற்பட்டபோதே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். இதனால் அப்பிரதேசத்தில் சில மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.(உ-4)




## சந்திரிகா களத்தில்

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களில் சிலர், அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகின. இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

06

# புதிய கூட்டணி இரகசியப் பேச்சு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்திலிருந்து விலகினால், எதிர்க் கட்சி உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு, புதிய கூட்டாட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு இரகசியப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் கூட்டாட்சிக்கு ஆதரவளிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலரை இணைத்து இந்தப் புதிய கூட்டணி அமைப்பது குறித்து பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

தற்போதைய கூட்டணியிலிருந்து ஓகஸ்ட்டுடன் வெளியேறப்போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் உள்ளிட்ட 18 பேர் முடிவெடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கும் நிலையில் அவ்வாறான

06

## நீதிமன்றில் ஆஜராக உத்தரவு ரணில்-மைத்திரிக்கு நோட்டீஸ்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் மீண்டும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

போலி ஆவணங்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் இன்று இடம்பெற்றன.

இந்த மனுவில் முதலாம் மற்றும் இரண்டாவது சாட்சியாளர்களான, ரணில் விக்ரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். இதன்படி குறித்த இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு முன்னதாக, நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டது.

எனினும், கடமைகளின் நிமித்தம் அவர்களால் நீதிமன்றுக்கு வர முடியாதுள்ளதாக, அவர்களது சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார். இந்நிலையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நிஸங்க நாணயக்கார, இருவருக்கும் மீளவும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவு பிறப்பித்துள்ளார். (உ)

## 1000 மில்லியன் மோசடி

## யாழ். இளைஞன் சென்னையில் கைது



போலிக் கடனட்டைகளைப் பயன்படுத்தி, இந்திய ரூபாய் பெறுமதியில் சுமார் 1,000 மில்லியன் ரூபாய்க்கு மேல் மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், இலங்கையர் உட்பட மூவரை, இந்தியாவின் மத்திய குற்றப்பிரிவு பொலிஸ் கைது செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திவ்யன் (வயது 30), இந்தியா கனக நகரைச் சேர்ந்த நவாஸ் செரீப் (வயது 22) மற்றும் பெங்களூர் வடமேற்கைச் சேர்ந்த நதீம் செரீப் (வயது 30) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

06

## யாழ் வர்த்தகரை 3 நாட்களாகக் காணவில்லை

யாழ்ப்பாண நகரில் காணாமற்போன வர்த்தகர் தொடர்பில் இதுவரை தகவல் கிடைக்கவில்லை என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

காரைநகரைச் சேர்ந்த வே.நடராஜா (வயது 63) என்பவரே கடந்த வெள்ளிக்கிழமை மதியம் காணாமற்போயுள்ளார் என்று அவரது மனைவி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியில் வர்த்தக நிலையம் நடத்தி வரும் அவர், நேற்றுமுன்தினம் மதியம் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருள்களை கொள்வனவு செய்வதற்காகச் சென்றிருந்தார். எனினும் அவர் வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## விந்தன் அமைச்சர்?



அமைச்சர் டெனீஸ்வரனை பதவி நீக்குமாறு ரெலோவினால் முதலமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவரது பதவிக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தை நியமிக்க கட்சி ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவருக்கு வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு பதவி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

06

# 3000 அரச நியமனங்கள்

அரச முகாமைத்துவ சேவையில் இந்த வருடத்தில் புதிதாக மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

எதிர்வரும் 22ஆம் 23ஆம் திகதிகளில் இதற்கான போட்டிப் பரீட்சை நடத் தப்படவிருப்பதாக அரச நிர்வாக மற்றும் முகாமைத் துவ அமைச்சு குறிப்பிட்டுள் ளது.

இதேவேளை இதற்காக ஒரு இலட்சத்துக்கும் மேற் பட்ட பரீட்சார்த்திகள் தோற்ற வுள்ளனர். அனைத்து பரீட் சார்த்திகளுக்குமான பரீட்சை அனுமதி அட்டை தற்போது அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாக பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் ஜயந்த புஷ்ப குமார தெரிவித்தார்.

இரண்டு மாத காலப்பகுதிக் குள் நேர்முகப் பரீட்சை நடத் தப்பட்டு முகாமைத்துவ சேவையில் நிலவும் வெற்றிடங் கள் பூர்த்தி செய்யப்படும் என்று அரச கூட்டு சேவை பணிப்பாளர் நாயகம் கே.வி. பி.எம்.ஜி கமகே தெரிவித் தார். (உ)

# சிரமதானம்



மண்டான் உப்புவெளி பிரதேசத்தில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் சிரமதானப் பணி இன்று மேற்கொள்ளப்பட் டுள்ளது. இதன்போது கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி, கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மத்தெணி கிராம முன்னேற்றச் சங்கத்தினர், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைப் பணியாளர்கள், கிராம சேவகர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (உ–11)

# அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யுங்கள்

## கறுக்காய்த்தீவு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, கறுக்காய்த்தீவு கிராமத் துக்கான போக்குவரத்து வசதிகள் உள் ளிட்ட அடிப்படை வசதிகள் இன்மை யால் அங்கு வசித்து வரும் 168 குடும்பங் கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளி யிட்டுள்ளனர்.

இது குறித்து கிராம மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"கிளிநொச்சி, பூநகரிப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கறுக்காய்த் தீவு கிராமத் தில் தற்போது 57 வரையான பெண் தலை மைத்துவக் குடும்பங்கள் உள்ளடங்கலாக 168 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றோம். இந்நிலையில், எமது கிராமத்துக்கான குடிநீர் முதற்கொண்டு ஏனைய வசதிகள் வரை எல்லாவற்றையும் வேறு இடங்களில் இருந்தே பெற்றுக் கொள்ள வேண்டிய அவல நிலையில் நாம் உள்ளோம்.

"எமது போக்குவரத்துக்காகக் காணப் படும் தம்பிராய் சந்தியிலிருந்து கறுக்காய் தீவு வரையான பிரதான வீதி கடந்த பல ஆண்டுகளாக எதுவித புனரமைப்புப் பணிகளும் இன்றி, குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. எனவே எமது கிரா மத்துக்கான பிரதான வீதியைப் புனரமைத் தல் மற்றும் ஏனைய அடிப்படை வசதி களைப் பெற்றுத்தரல் போன்ற எமது அடிப் படைத் தேவைகளை பூர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுக்கிறோம்" என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (உ)

# 3785 முறைப்பாடுகள்

இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில், 3785 முறைப்பாடு கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, சிறுவர்களுக்கு எதி ரான வன்முறைகள் குறித்து 956 முறைப் பாடுகளும், கல்வி அறிவை வழங்காமை குறித்து 602 முறைப்பாடுகளும் பதி வாகியுள்ளன.

அத்துடன், பாலியல் வன்கொடு மைகள், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், திருட்டு வேலைகளுக்கு அவர்களைப் பயன்படுத்துதல் மற்றும் கடத்திச் செல்லல் போன்றன தொடர் பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதி கார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (உ)

# விளையாட்டுப்போட்டி

புலோலி மேற்கு அறிவகம் சன சமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு விளை யாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு புலோலி மேற்கு முருகன் கோயிலடியில் குறித்த விளை யாட்டுப்போட்டி நடைபெறும். (உ-11)

# இறுவெட்டு வெளியீடு



வல்லிபுர குருக்கட்டுச் சித்திவிநாயகர் மீது பாடப்பட்ட அருட் பேழை இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு இன்று நடைபெற்றது. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப் பாளரும் வட மாகாண சபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக் கொழுந்து கலந்து கொண்டு இறுவட்டின் முதல் பிரதியைப் பெற்று கொண்டார். நிகழ்வில் விருந்தினர்களாக ஓய்வு நிலை நீதிபதி இ.வசந்தசேனன், கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ–11)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று நடைபெற்றுள்ளது. குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முற்பகல் 9.30 மணியள வில் ஆரம்பமாகியது.

இதில் இணைத்தலைவர்க ளான மாவை சேனாதிராஜா, இராஜாங்க அமைச்சர் விஜய கலா மகேஸ்வரன், நாடாளு மன்ற உறுப்பினர்களான அங்க ஜன் இராமநாதன், சிவஞானம் சிறீதரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இவ் வாண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிகளைப் பெற்றுக்கொள் ளல் மற்றும் வேலைத்திட்டங்க ளின் முன்னேற்ற மீளாய்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங் கள் தொடர்பில் கலந்துரையா டப்பட்டன. (எ)

# திருட்டு மின்சாரம் யாழில் மூவர் கைது

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோத மான முறையில் மின்சாரம் பெற்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் மயிலணிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின் சாரம் பெற்ற இருவர் நேற்றும், குரு நகர்ப் பகுதியில் திருட்டு மின்சாரம் பெற்ற ஒருவர் நேற்று முன்தினம் இரவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து சென்ற மின் சார சபையின் புலனாய்வு அதிகாரி களும் சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து நடத்திய திடீர்ச் சோதனை யின் போதே இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். (உ)

# மீனவர்கள் கைது

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடு பட்ட நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற் படை தெரிவித்துள்ளது.

நேற்றையதினம் பருத்தித்துறை கூவில் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் இவர்கள் பயன்படுத் திய ட்ரோலர் படகு மற்றும் வலை கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள் ளன. இதேவேளை கைது செய்யப் பட்ட நான்கு மீனவர்களும் ஜெகதாப் பட்டணம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தமிழக ஊடகங்கள் தெரிவித் துள்ளன. (உ)


மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848


# ரி-56 உடன் இருவர் கைது



மீரிகம, கிதலவலான பிரதேசத்தில் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் 25 ரவைகளைத் தம்வசம் வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கம்பஹா பொலி ஸாருக்குக் கிடைத்த இரகசியத் தக வலையடுத்து, முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் இருவரும் அதே பிரதேசத்தைச் சேர்ந்தவர் கள் எனத் தெரியவருகின் றது.

அவர்களை இன்றைய தினம், அத்தனகல்ல நீத வான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

# ஈபிள் கோபுர விருந்து




பிரான்ஸ் நாட்டுக்கு ஒரு நாள் பயணமாக சென்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்புக்கும் மற்றும் அவரது மனைவிக்கும் பரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்தில் விருந்து வழங்கப்பட்டுள்ளது.
பிரான்ஸ் புரட்சியை நினைவுப்படுத்தும் வகையில் ஜூலை 14ஆம் திகதி பிரான்ஸ் தலைநகரான பரிஸில் நடைபெற்ற விழாவில் அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் டிரம்ப் மற்றும் அவரது மனைவியான மெலினியா பங்கேற்றனர்.
டொனால்ட் டிரம்பை வரவேற்ற பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் பரிஸில் உள்ள புகழ்பெற்ற இடங்களை அவருக்குச் சுற்றிக்காட்டினார்.
இதன் ஒரு பகுதியாக உலகப் புகழ்பெற்ற ஈபிள் கோபுரத்தில் டொனால்ட் டிரம்புக்கும் அவரது மனைவிக்கும் விருந்து வழங்கப்பட்டது. (இ)

# சசிகலாவுக்கு சிறைமாற்றம்?



சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் (அம்மா அணி) சசிகலாவுக்கு பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் தனிச் சமையலறை, சிறப்புச் சொகுசு வசதிகள் செய்யப்பட்டு இருப்பதாகவும் அதற்காக 2 கோடி ரூபா லஞ்சம் வழங்கப்பட்டு இருப்பதாகவும் சிறைத்துறை டி.ஐ.ஜி. ரூபா கூறியிருந்தார்.
இது கர்நாடகத்தில் மட்டுமின்றி தமிழ்நாட்டிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து உயர் மட்ட விசாரணைக்கு கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளது.
மேலும் இந்த விவகாரம் தொடர்பாக டி.ஜி.பி. சத்திய நாராயணராவுக்கும், டி.ஐ.ஜி. ரூபாவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.
இதன் காரணமாக பரப்பன அக்ரஹாரா சிறையில் உள்ள கைதிகள் 2 குழுக்களாகப் பிரிந்து செயற்படுகிறார்கள். கைதிகளுக்குள் கோஷ்டி மோதல் உருவாகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து பரப்பன அக்ரஹாரா சிறையில் இருந்து 32 கைதிகள் மாநிலத்தின் வெவ்வேறு சிறைகளுக்கு நேற்று மாற்றப்பட்டனர். அத்தோடு இத்தகைய சிறப்பு வசதிகள் பற்றிய புகார்களைத் தடுக்க சசிகலாவை கர்நாடகத்துக்குள் வேறு சிறைக்கு மாற்றலாமா? அல்லது வெளிமாநிலச் சிறைக்கு மாற்றலாமா? என்று கர்நாடக அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. (இ)

# ஜனாதிபத் தேர்தல் இந்தியாவில் இன்று





இந்திய ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பதிவு இன்று திங்கட்கிழமை நடைபெற்றது. டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்திலும், தமிழ்நாட்டில் சென்னையில் அமைந்துள்ள சட்டசபை வளாகத்திலும், இதே போன்று பிற மாநிலங்களில் உள்ள சட்டசபை வளாகங்களிலும் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.
தமிழக சட்டசபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் தமிழக எம்.எல்.ஏ.க்கள் வாக்களித்தனர். பீகார் மாநில கவர்னராக இருந்து வந்த ராம்நாத் கோவிந்த் (வயது -71) பாரதீய ஜனதா கூட்டணியின் வேட்பாளராகவும், . இவரை எதிர்த்து காங்கிரஸ் தலைமையிலான 17 எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் மீராகுமாரும் (வயது- 72) ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஜனாதிபதித் தேர்தலையொட்டி இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மற்றும் வாக்குரிமை பெற்றுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் நாடாளுமன்றத்துக்கு இன்று வருகை தந்து வாக்களித்தனர்.(இ)

# வெற்றி



பப்புவா நியூ கினியா நாட்டில் நடந்த பொதுத்தேர்தலில் பிரதமர் பீட்டர் ஓ நீல் வெற்றி பெற்றுள்ளதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இது 4 ஆவது முறை. ஆனால் பொருளாதார ரீதியில் நிச்சயமற்ற தன்மை நிலவுகிற அந்த நாட்டில், ஆட்சி அமைக்கப்போவது யார் என்பதில் இன்னும் இழுபறி நிலவுகிறது. (இ)

# பெண்களைக் கொன்ற தாக்குதலாளி கைது





எகிப்தில் சுற்றுலா சென்ற இரண்டு ஜேர்மன் பெண்களைக் கத்தியால் குத்திக் கொன்ற தாக்குதலாளியின் புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது.
எகிப்தின் பிரபலமான விடுதி ஒன்றில் கத்தியுடன் நுழைந்த 20 வயதுடைய மர்ம நபர், இரண்டு ஜேர்மன் பெண்களை கத்தியால் குத்தினார். இந்தத் தாக்குதலில் இரு பெண்களும் அங்கேயே உயிரிழந்தனர்.
மேலும் தாக்குதலில் ஈடுபட்ட மர்ம நபர் நான்கு வெளிநாட்டினரை குத்திக் காயப்படுத்திவிட்டு சம்பவ இடத்திலிருந்து தப்பித்துள்ளார்.
காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களும் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களே எனத் தெரியவந்துள்ளது.
தாக்குதல்தாரி பெண்களை குறிவைத்தே தாக்குதல் நடத்தியதாகவும், "விலகிச் செல்லுங்கள், எகிப்தியர்கள் வேண்டாம்" எனக் கூச்சலிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் பின்னர் நடத்தப்பட்ட விசாரணையின் பின்னர் தாக்குதலாளியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ)

# குஜராத்தில் மழை 4 பேர் உயிரிழப்பு



குஜராத் மழை வெள்ளத்தில் சிக்கி கடந்த சனிக்கிழமை மாலை முதல் இதுவரை 4 பேர் பலியாகியுள்ளனர். 6 பேர் காணாமல் போயுள்ளனர்.குஜராத் மாநிலத்தில் கடந்த சில நாட்களாகக் கடும் மழை பெய்து வருகிறது.
இதன் காரணமாக மாநிலத்தின் பல பகுதிகளும் வெள்ளக்காடாகின.
முக்கிய ரயில் நிலையங்களில் ரயில் போக்குவரத்து முடங்கியுள்ளது.
மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட 120 கிராமங்களில் மின்சாரம் முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. 2000 க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.மேலும் இரண்டு நாட்களுக்கு குஜராத்தில் பெருமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. (இ)

# பூனைக் கொலையாளிக்கு 16 வருடச் சிறை!



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் சான் ஜோஷ் நகரில் கம்பிரியன் பார்க் என்ற இடம் உள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டில் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் செல்லப்பிராணியாக வளர்த்து வந்த பூனைகள் அடுத்தடுத்து மாயமாகின.
இந்த நிலையில், அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமெரா ஒன்றில் இளைஞர் ஒருவர் பூனைகளைத் திருடும் காட்சி பதிவானது.
அதனையடுத்து விசாரணையில் குதித்த பொலிஸார் அந்த இளைஞனைக் கைது செய்தனர். அவனிடம் விசாரணை நடத்தியதில் இதுவரை அவன் 18 பூனைகளைத் திருடிச் சென்று அவற்றை சித்திரவதை செய்து கொலை செய்தமை தெரியவந்தது.
கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கின் இறுதி விசாரணை நடந்தது.
அப்போது தன் மீதான குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொண்ட இளைஞன் தனக்கு மன்னிப்பு வழங்குமாறு நீதிபதியிடம் கோரினான்.ஆனால் அதனை நிராகரித்த நீதிபதி அவனுக்கு 16 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார். (இ)

# மழலையின் அழுகை விலகிய கணவர்





செர்பியாவில் 20 ஆண்டு தீவிர முயற்சிக்குப் பின் உயிரைப் பணயம் வைத்து 60 வயதில் குழந்தை பெற்ற பெண்ணை அவரது கணவர் விட்டு விலகிச் சென்றுள்ளார்.
செர்பியாவை சேர்ந்த தம்பதியரான 68 வயதான கணவருக்கும், 60 வயதான மனைவிக்கும் நீண்ட நாட்களாகக் குழந்தைகள் பிறக்கவில்லை. இந்த நிலையில் இருவரும் வயோதிபர்களாக மாறியதால் இனிக் குழந்தை வேண்டாம் எனக் கணவர் முடிவெடுத்தார். ஆனால் மனைவியோ 20 வருடங்களாக முயற்சித்து செயற்கை முறையில் கருத்தரித்து 60 வயதில் ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார். நல்லபடியாக குழந்தை பிறந்த நிலையில் தனது மனைவியையும், குழந்தையையும் விட்டு விலகிச்செல்ல முடிவு செய்துள்ளார் கணவர்.இதுகுறித்து அவர் கூறியதாவது, "முதலில் நான் குழந்தைக்கு மறுப்பு தெரிவித்தேன். தற்போது, இரவில் குழந்தை அழுவதால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.நான் வயதான உடல் நலம் குன்றிய நபர், இந்த வயதில் குழந்தையை வளர்க்க முடியாது.அதனால், இருவரையும்விட்டு விலகிப்போகிறேன்" என்று தெரிவித்துள்ளார். (இ)



# வெற்றி இலக்கு 474

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்க அணி 474 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயம் செய்துள்ளது.

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாட்டிங்காமில் நடைபெற்றுவருகிறது.


போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, முதல் இன்னிங்ஸில் 335 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அதேவேளை, இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 205 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்திருந்தது.

பின்னர் இண்டாவது இன்னிங்ஸை விளையாடிய தென்னாபிரிக்கா, இரண்டாம் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 75 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. மூன்றாவது நாளான நேற்று தொடர்ந்து விளையாடிய தென்னாபிரிக்கா, நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

தென்னாபிரிக்கா சார்பாக எல்கர் 80 ஓட்டங்களையும், அம்லா 87 ஓட்டங்களையும் சேர்த்து ஆட்டமிழந்தனர். டு பிளெசிஸ் 63 ஓட்டங்களையும், பிலாண்டர் 42 ஓட்டங்களையும் சேர்த்த நிலையிலும், மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் தென்னாபிரிக்க அணி, 9 விக்கெட்களை இழந்து 343 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை இடைநிறுத்திக்கொண்டது,

474 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிய ஆட ஆரம்பித்த இங்கிலாந்து அணி, நான்கு பந்துகளை எதிர்கொண்ட நிலையில் ஓர் ஓட்டத்தைச் சேர்த்த நிலையில் ஆட்ட நேரம் முடிவுற்றது. இன்று ஆட்டத்தின் நான்காவது நாளாகும். (ஒ)



# “இது ஒரு மாயாஜாலம்”

“எட்டாவது முறையாக விம்பிள்டனை வென்று இங்கு நிற்கிறேன். இது ஓர் அற்புதமான நிகழ்வு” என ரோஜர் பெடரர் கூறியுள்ளார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற விம்பிள்டன் இறுதிப்போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பெடரர், 6:3, 6:1, 6:4 என்ற புள்ளிக் கணக்கில் எளிதில் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பெடரர், “இந்த விம்பிள்டன் தொடரில் எந்தவொரு சுற்றையும் இழக்காமல் கிண்ணத்தைக் கையில் ஏந்தியிருப்பது உண்மையிலேயே மாயாஜாலம் போன்று உள்ளது. இன்னும் இதை என்னால் நம்ப முடியவில்லை. 8ஆவது முறையாக விம்பிள்டனை வென்று இங்கு நிற்கிறேன். இது ஒரு அற்புதமான நிகழ்வு” என்றார்.

விம்பிள்டனை 8 தடவைகள் கைப்பற்றிய ஒரே வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ள பெடரர், 19 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற பெருமையையும் பெற்றுள்ளார்.(ஐ)



# இறுதியில் றோயல்

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்கு ஊரெழு றோயல் அணி தகுதிபெற்றுள்ளது.

நேற்று இரவு நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் கஜந்தன் தலைமையிலான ஊரெழு றோயல் அணி, கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியுடன் மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஊரெழு றோயல் அணி, 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

றோயல் அணி சார்பாக, எடிசன் 2 கோல்களையும் கஜகோபன், கபில் ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர்.

ஆட்டநாயகனாக எடிசன் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)

# பாரதியை வீழ்த்தியது கலைமதி



அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இந்த ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதியது.

எதிரணிக்கு எந்தவொரு சுற்றையும் வெல்லும் சந்தர்ப்பத்தை வழங்காத கலைமதி, 3:0 என்ற சுற்றுக்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக புத்தூர் கலைமதி வீரரான வாகீசன் தெரிவு செய்யப்பட்டார்.

இத்தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் எதிர்கொள்ளவுள்ளது. (ஐ)

# அடுத்த மாதம் வருகிறது கலக்ஸி நோட் 8




சம்சுங் நிறுவனத்தின் அதிகம் எதிர்பார்க்கப்படும் கலக்ஸி நோட் 8 ஸ்மார்ட் கைத்தொலைபேசி அடுத்த மாதம் வெளியிடப்படும் என அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியான டொங்சென் தெரிவித்துள்ளார்.

வெளியீட்டுத் திகதியை குறிப்பிடாதபோதும் இந்தச் சாதனம் ஒகஸ்ட் 23ஆம் திகதி நியூயோர்க் நகரில் அறிமுகம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேசச் சந்தையில் இரண்டு பதிப்புகளாக வெளியிடப்படவிருக்கும் கலக்ஸி நோட் 8, முதற்கட்டமாக அமெரிக்கா, கொரியா மற்றும் லண்டனில் செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் வெளியிடப்படும் என இதுவரை வெளியாகியுள்ள தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# பரணியின் அதிரடிப் பதில்கள் அதிர்ந்தது ‘பிக்பாஸ்’ அரங்கு



நடிகர் பரணி ‘பிக் பாஸ்’ நிகழ்ச்சி நடக்கும் வீட்டிலிருந்து சுவர் ஏறிக் குதித்து தப்ப முயற்சித்து, விதியை மீறியமையால் அவர் வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

அதற்கு முன் கஞ்சா கறுப்பு மற்றும் பரணி இடையே ஒரு பெரிய சண்டையே நடந்தது. அப்போது தீயணைப்பு சிலிண்டரை எடுத்து அடிக்க ஓடினார் கஞ்சா கறுப்பு.

இந்நிலையில், நேற்றையதினம் நிகழ்ச்சிக்கு வந்த கமல்ஹாசன், பரணியை மேடைக்கு அழைத்துப் பேசினார்.

அந்த சண்டை பற்றி கேட்டதற்கு, “என்ன காரணம் என எனக்குத் தெரியவில்லை. அவரிடம்தான் கேட்கவேண்டும். நான் ஹீரோவாக நடித்த ஒரு படத்தில், டைரக்டர் வேறு ஒருவரை காமெடியனாக போட நினைத்தார், ஆனால் கஞ்சா கறுப்புக்காக பேசி நான் வாய்ப்பு வாங்கிக் கொடுத்தேன். ஆனால் அவரோ பிக் பாஸ் நிகழ்ச்சியில் என்னை இப்படி செய்துவிட்டார்” என வருத்தத்துடன் சொன்னார் பரணி.

மேலும், “குடும்பத்தைப் பிரிந்து பணம் ஈட்ட வெளிநாட்டில் கஷ்டப்படும் சாதாரண ஒருவன் படும் கஷ்டத்தைத் தான் பிக் பாஸ் வீட்டில் அனுபவித்ததாகவும் அவர் கூறினார்.

அப்போது மக்கள் வாக்களித்த நீங்கள் தானே வின்னர் பிறகு ஏன் வெளியேறினீர்கள் என்று கமல் கேட்டார்.

“நான் இருந்தால் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை என பெண்கள் மாத்திரமின்றி ஆண்களும் சொன்னதால்தான் வீட்டை விட்டு வெளியேற முடிவெடுத்தேன்” என சுவர் ஏறிக் குதித்தது பற்றி பரணி கூறினார்.

“தற்போது உள்ளவர்களில் யார் ஜெயிப்பார்” என்று கமல் கேட்டதற்கு, “நான் வெளியேறும்போது ‘Bye பரணி’ என்று ஒலித்த வார்த்தை (ஓவியா) ஜெயிக்கும்” என்றார்.

இதையடுத்து இந்நிகழ்ச்சியின் ‘வின்னர்’ நீங்கள்தான். இது எனது தனிப்பட்ட கருத்து என கமல்ஹாசன் கூற, அவரது காலில் விழுந்து வணங்கினார் பரணி.

பிக்பாஸ் நிகழ்ச்சியிலிருந்து ஏற்கனவே 4 பேர் வெளியேறியிருந்த நிலையில் நேற்று ஆர்த்தியும் வெளியேற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மன்னாருக்கு ரயில் இல்லை

கொழும்பு கோட்டையிலிருந்து தலை மன்னார் வரையான ரயில் சேவை இன்று முதல் எதிர்வரும் 23ஆம் திகதி வரை மதவாச்சி நகரம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ரயில் சேவை மதவாச்சி வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரை விசேட பஸ் சேவைகளை நடத்த இலங்கை போக்கு வரத்துச் சபை ஏற்பாடுகளை செய்துள்ளது. மதவாச்சி மற்றும் செட்டிக்குளம் ஆகிய நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ள பாலமொன்றை அகற்றி புதிய பாலம் ஒன்றை நிர்மாணிப்பதனால், குறிப்பிட்ட ரயில் சேவை இவ்வாறு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ)


## கோவண ஆர்ப்பாட்டம்

எதிர்வரும் 26ஆம் திகதியன்று, கொழும்பில் கோவணத்துடன் ஆர்ப்பாட்ட மொன்றை நடத்துவதற்கு தீர்மானித் துள்ளதாக, தேசிய விவசாயிகள் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. விவசாயிகளுக்கான மானியம் மற்றும் இழப்பீடுகள் இல்லாமல் செய்தல், உரமானியத்தை உரிய முறையில் வழங்காமை, அறுவடைக்கு உரிய விலையைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை ஆகிய வற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன் னெடுக்கவுள்ளதாக தேசிய விவசாயி கள் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார். இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி நாடளாவிய ரீதியில் உள்ள சகல பிரதேசங்களையும் சேர்ந்த விவசாயிகளும் பங்கேற்பர் என்றும் அவர் அறிவித்துள்ளார். (உ)

## தலைக் கவசத்தால் அடித்துக் கொலை

செட்டிக்குளம் - நெரியன்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப் பட்டுள்ளார். சம்பவத்தில் பலியானவர் மாங்குளம் பகுதியைச் சேர்ந்த 64 வயதானவர் என தெரியவருகின்றது. கருத்து முரண்பாடு வலுப்பெற்றமையே தாக்குதலுக்குக் காரணம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிக்கல


# மாகாண சபை தேர்தல் ஒத்திவைப்பு



செப்ரெம்பர் மாதத்துடன் பதவிக் காலம் நிறைவடையவுள்ள வட மத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு ஆகிய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், திகதி குறிப்பிடப் படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ள தாகத் தகவல் வெளியா கியுள்ளது. 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்து வதற்கான சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சிமன்றங்களின் அமைச்சர் பைஸர் முஸ்தபாவால் சமர்ப்பிக் கப்பட்டுள்ள மேற்படி சட்டமூல மானது வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்டுள்ளது. இந் நிலையிலேயே தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டி ருப்பதாகத் தெரியவருகின்றது. மாகாணசபைகளுக்கான வேட்பு மனுப் பத்திரங்களில், பெண் வேட்பாளர்களின் எண்ணிக் கையை அதிகரித்துக் கொள்ளும் வகையிலேயே இந்தச் சட்டம் திருத்தப்படவுள்ளது. (உ)

## 55 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி

உள்நாட்டு சந்தையில் அரிசிக் கான தட்டுப்பாட்டை தவிர்ப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள் ளார். உடன் அமுலுக்கு வரும் வகையில் 55 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை பாகிஸ்தான் மற்றும் மியன்மார் நாடுகளி லிருந்து இறக்குமதி செய்வதற் கான நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது. இந்த அரிசி இரண்டு வாரங்களுக்குள் இலங் கையை வந்தடையும். சில மோசடி வர்த்தகர்கள் அரிசியை பதுக்கி, அரிசித் தட்டுப்பாடு உள்ளதாக கூறுவதற்கு முயற்சித்து வருகின்றனர். பாவனையாளர்களுக்கு இதன் மூலம் ஏற்படும் நெருக்கடியை தவிர்க்கும் வகையில் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் கூறி னார். (உ)



# டெங்கை ஒழிக்க தேர்தல் தேவை

“குப்பை மற்றும் டெங்கு வுக்கு எதிராகப் போராடக் கூடிய அடிமட்ட அரசியல் தலைவர் ஒருவர் தற்போது தேவை. அதனால், உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டி யது அவசியமாகும்” என, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரி வித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், நகர சபைக்கு முழுமை யான அரசியல் அதிகாரம் வழங்கப்படாததன் காரண மாகவே, டெங்கு மற்றும் கழிவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமல் இருக்கின்றது. அரசாங்கத் தில் உள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இவ்விவகாரத்தில் கயிறு இழுக்காமல், குழப்பங் களை விளைவிக்காமல் இந்த வருட முடிவுக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி, உள்ளூ ராட்சிப் பிரதிநிதிகளை நிய மிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## வவுனியா, திருகோணமலை மாவட்டங்கள் அபிவிருத்தி

வவுனியா மற்றும் திரு கோணமலை மாவட்டங் களின் அபிவிருத்திக்கு வழிகோலும் மல்வத்துஓய நீர்த்தேக்க செயற்றிட் டத்தை விரைவில் ஆரம் பிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளதாக நீர்ப்பாசன ராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டாரா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் குறிப்பிட்ட அவர் இந்த செயற்றிட்டம் 2020ஆம் ஆண்டு நிறைவு பெறும். மல்வத்துஓய நீர்த்தேக்கம் ஒரு இலட் சத்து 66 ஆயிரத்து 416 சதுர ஏக்கர் நீர் கொள்ளளவை கொண் டுள்ளது. இதன்மூலம் இரண்டாயிம் ஏக்கர் பயிர்ச்செய்கை நிலங் களுக்கு நீர்ப்பாசன வசதி வழங்க முடியும். இதற்கு மேலதிகமாக நீர் மின் உற் பத்தி நிலையம் ஒன்றும் இங்கு நிர்மாணிக்கப்படும். இதன்மூலம் 400 ஜிகா-வோட்ஸ் மின்சாரம் உற் பத்தி செய்யப்படும். அத்துடன் குடிதண்ணீர் வசதி வழங்கும்திட்டமொன் றும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார். (உ)

## முல்லையில் கடும் வறட்சி குளங்களில் நீர்மட்டம் குறைவு

முல்லைத்தீவில் குளங்க ளின் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்து செல்வத னால் விவசாயம், நன்னீர் மீன்பிடி, நிலத்தடி நீர், விலங்குகளுக்கான குடி தண்ணீர் உள்ளிட்ட நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள் கின்றனர். முல்லைத்தீவின் முக்கிய குளங்களான முத்தையன்கட்டுக்குளம், வவுனிக்குளம் என்பவற்றின் நீர் மட்டம் அடிநிலையி னைச் சென்றடைந்துள்ள தன் காரணமாக இக்குளங் களின் கீழான விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட் டுள்ளன. அத்தோடு, இக் குளங்களை நம்பியுள்ள ஆயி ரத்துக்கும் மேலான நன்னீர் மீன்பிடி குடும்பங்கள்வறுமை நிலைமைக்குள் தள்ளப்பட் டுள்ளன. இந்நிலையில் சிறுபோக நெற்செய்கையும் கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (உ)

# 23 நாய்கள் நஞ்சு வைத்துக் கொலை சிக்கியது சித்திரவதைக் காணொளி



மொரட்டுவ பல்கலைக்கழக வளாகத் துக்குள், 23 தெரு நாய்களுக்கு நஞ்சு கொடுத்து கொன்றமை தொடர்பான காணொளி வெளியாகியுள்ள நிலையில், விலங்கு ஆர்வலர்கள் இது குறித்துக் கண்டனம் வெளியிட்டுள்ளனர். மொரட்டுவை பல்கலைக்கழக மாண வர்களே நேற்று முன்தினம் இந்தக் காணொளியை வெளியிட்டுள்ளதோடு, இதற்குக் கண்டனம் தெரிவித்து, ஆர்ப் பாட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். மொரட்டுவை பல் கலைக்கழக அதிகாரிகளும் வேறு சில ரும் சேர்ந்து, நாய்களுக்கு அதிக போதை அடங்கிய மருந்துகளைக் கொடுத்து, சித் திரவதை செய்து கொல்லுவதாக அமைந் துள்ள அந்தக் காணொளி, வெளியிடப் பட்ட பின்னர், அதை அகற்றுமாறு அழுத் தங்கள் ஏற்பட்டதாகவும் மாணவர் கள் தெரிவித்துள்ளனர். (உ)

# மாணிக்கக்கல் அகழ்வு: 5 பேர் கைது

பொகவந்தலாவ கெசல்கமுவ ஆற்றுக்கு அருகில் டின்சின் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்ந்துகொண்டிருந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸா ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்படி அவர்கள் நேற்று பொகவந்தலாவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். கைதுசெய் யப்பட்டவர்களிடமிருந்து மாணிக்க கல் அகழ்வுக்கு பயன்படுத்திய பல உபகரணங்களும் கைப்பற்றப்பட் டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸ் பிணை யில் விடுவித்துள்ளதாகவும், எதிர்வரும் 18ஆம் திகதி ஹட்டன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப் படுத்த நடவடிக்கைகள் எடுத்திருப் பதாக பொகவந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரி வித்தார். (உ)

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

‘எதிரொலி’ மாலைத் தினசரிக்கு
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com



## நாளை நாளும் கோளும்

18.07.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 02ஆம் நாள்

நவமி காலை 06.38 வரை | தசமி பி.இ. 04.24 வரை | சித்தயோகம் | கரிநாள் | கார்த்திகை விரதம்

இராகுகாலம் 03.00-04.30 | சுபநேரம் 10.30-12.00 | எமகண்டம் 09.00-10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீண்செலவு | வரவு | ஆர்வம் | சாந்தம் | செலவு | பாசம் | உறுதி | உதவி | கீர்த்தி | கவனம் | இலாபம் | காரியசித்தி |



# அப்பாடா முடியலயே

தேசிய அரசாங்கமாக பயணிப்பதென்பது மிகவும் கடினமான விடயம் என தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் நலனை அடிப்படையாக வைத்தே தேசிய அரசாங்கமாக பணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். 4 இலட்சத்து 20 ஆயிரம் கோடி கடனை எதிர்வரும் ஆண்டு செலுத்த வேண்டிய நிலைக்குள் அரசாங்கம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பன்னிப்பிட்டியவில் இன்று மாடிவீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர், நாட்டின் நலன்கருதி தேசிய அரசாங்கமாக பயணித்துக்கொண்டிருக்கின்றோம். தேசிய அரசாங்கமாக பயணிப்பது என்பது சுலபமான காரியம் அல்ல. கொஞ்சம் சரிவு ஏற்பட்டாலும், பயணத்தில் தவறு ஏற்பட்டாலும் எங்கு போய் முடியும் என்பது தெரியாது என்றார். (எ-09)

# குப்பையை அகற்றவே வக்கில்லாத அரசு



தேசிய அரசாங்கம் வாக்குறுதிகள் எவற்றையும் நிறைவேற்றாது உள்ளதாக நாமல் ராஜபக்ச எம்.பி கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். பத்து இலட்சம் வேலை வாய்ப்புக்களை வழங்குவதாக அரசாங்கம் கூறியது. அப்படியாயின் இதுவரை ஆக்குறைந்தது ஐந்து இலட்சம் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தற்போது வருடமொன்றுக்கு நான்கு இலட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புக்கள் அதிகரித்தவாறு உள்ளன. கொழும்பை சிங்கப்பூராக மாற்றுவோம் என்றார்கள். துறைமுக நகரத்தினை நிறுத்துவோம் என்றார்கள் எதுவுமே நடைபெறவில்லை. கொழும்பில் எங்கு பார்த்தாலும் குப்பைகளாகவே காணப்படுகின்றன. குப்பைகளைக் கூட அகற்ற முடியாதவர்கள் எப்படி கொழும்பை சிங்கப்பூராக்குவது என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (உ-09)

## அந்த நாள் ஞாபகம்.....!



1911.07.17

யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டத்தின் திருமண விதிகளுக்கு மாற்றாக "யாழ்ப்பாண திருமண சிறப்புச் சட்டம்" கொண்டுவரப்பட்டது

# இலங்கைக் கடற்படைக்கு கப்பல் கையளிப்பு



இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பல் எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கை கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளது. இலங்கைக் கடற்படைக்கு மிகப்பெரிய இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை 1000 கோடி ரூபா செலவில் கட்டுவதற்கான உடன்பாடு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கையெழுத்திடப்பட்டது. இதற்கமைய கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட முதலாவது கப்பலே அதிகாரபூர்வமாக கையளிக்கப்படவுள்ளது. 105 மீற்றர் நீளமான- 2400 எடை கொண்ட இந்தப் போர்க்கப்பல் இலங்கை கடற்படையினால் பயன்படுத்தப்படும் மிகப் பெரிய போர்க்கப்பலாக இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. (உ)

# இணைவு இன்றேல் சு.க. அழிவதை தடுக்க முடியாது

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்சவும் இணைந்து செயற்படமுன்வராவிட்டால் சுதந்திரக் கட்சி அனைவர் கண் முன்னே அழிந்து போவதை எவராலும் தடுக்க முடியாது என அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார். இது குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் முக்கியமான தருணத்தில் நிற்கின்றோம். இனியும் தாமதிக்க முடியாது. சுதந்திரக் கட்சி ஒரு முடிவை எடுத்தே ஆக வேண்டும். அடுத்த தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்றால் மைத்திரியும் மகிந்தவும் ஒன்றிணைந்தே ஆக வேண்டும். இருவரும் மனம் விட்டுப் பேச வேண்டும். கருத்து வேறுபாடுகளை மறந்து இருவரும் ஒன்றிணைய வேண்டும். அரசில் இருந்து 18பேர் வெளியேறுவதற்கு முடிவெடுத்துள்ளதால் சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் இன்னும் சிக்கலையே சந்திக்கும். இருவரும் ஒன்றிணைந்தால் மட்டுமே இவ்வாறான பிளவுகளைத் தடுத்து கட்சியைப் பலப்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# 2025 வரை அசைத்திட முடியாது

தேசிய அரசாங்கத்தின் பயணம் 2025வரையில் தொடரும் என அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனராட்ன தெரிவித்துள்ளார். தேசிய அரசாங்கமாக செயற்படுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றுக்கு இடையிலான ஒப்பந்தம் நிறைவடையவுள்ள நிலையில் அது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மகிந்த ராஜபக்ச வினரும் அவருடைய கூட்டத்தினரும் ஆட்சியைக் கைப்பற்றும் அதிகார மோகத்திலேயே நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த முயல்வதாக குறிப்பிட்ட அவர் அவர்களின் கனவு பலிக்காது என்றும் குறிப்பிட்டார். (உ-09)

## தொடர்ச்சிகள்

### புதிய கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொரு நெருக்கடி ஏற்பட்டால் புதிய கூட்டணி ஒன்றினை அமைப்பது குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் புதிய அரசியலமைப்பு உருவாக்க நகர்வுகளைக் குழப்பும்வகையில் அரசாங்கத்தில் இருக்கின்ற சிலர், உடனடியாக அரசாங்கத்தை விட்டு வெளியேறினால், நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்டம் காணவிடாது, ஆட்சியைக் கொண்டுசெல்வதற்கு தேவையான, பெரும்பான்மையைக் கவனத்தில் கொண்டே, மேற்படி பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது.

இது தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் இணைந்து மேற்கொண்டுவருவதாகத் தெரிய வருகின்றது. (எ)

### யாழ். இளைஞன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு வங்கிகளின் கடனட்டைகள் போன்ற 144 போலிக் கடனட்டைகள், அவற்றைத் தயாரிப்பதற்காக வைத்திருந்த 36 இயந்திரங்கள், 270 போலி சுவீப் அட்டைகள், காட் ரீடர்ஸ், அச்சு இயந்திரங்கள் என்பவற்றையும் பொலிஸார் இவர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

இந்திய ரூபாய் பெறுமதியில் சுமார் 1,000 மில்லியன் ரூபாய்க்கு இவர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக, ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இணையத்தில் பொருட்களைப் பதிவு செய்தே, இவ்வாறான மோசடியில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இது பாரியளவிலான இணைய மோசடியாக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை இம்மோசடியின் பிரதான சூத்திரதாரியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திவ்யன் என்பர், கடந்த 10 வருடங்களுக்கு முன்பு இந்தியாவின் சென்னைக்கு சட்டவிரோதமாக வந்தவரென்றும், சென்னை பொலிஸாரால் தேடப்பட்டு வருபவரென்றும் வெளிநாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ)

### சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பின்போது, அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு தயாராகியுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை, அரசாங்கத்துக்குள்ளே வைத்துக் கொள்ளும் முயற்சியில், ஈடுபடுமாறும் சந்திரிகாவிடம் கோரப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. அதனடிப்படையில், அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ள உறுப்பினர்கள் குழுவுடன், சந்திரிகா கடந்த வாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அறியமுடிகின்றது. (உ)

### அமைச்சராகிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான கட்சியின் தீர்மானத்தை முதலமைச்சருக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை ரெலோ கட்சி மேற்கொண்டுவருவதாக தெரிய வருகின்றது. அமைச்சர் டெனீஸ்வரன் மீது விசாரணை நடத்தப்படும் என முதலமைச்சர் தீர்மானித்திருந்த நிலையில் அவர் அதனை நிராகரித்திருந்தார். இந்நிலையில் கட்சியின் கட்டுப்பாடுகளை டெனீஸ்வரன் மீறிவிட்டதாக கூறிய ரெலோ அவரிடம் விளக்கம் கோரியிருந்தது. இந்நிலையில் அவரை பதவிநீக்கம் செய்து விந்தன் கனகரத்தினத்தை அமைச்சராக்கும் நடவடிக்கைகளை ரெலோ மேற்கொண்டுவருவதாகத் தெரிய வருகின்றது. (எ)

# நள்ளிரவில் இளைஞன் அடித்துக் கொலை

வீரகெடிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்காலை வீதி பகுதியில் இன்று அதிகாலை ஒரு மணியளவில் இளைஞர் ஒருவர் அடித்துக்கொல்லப்பட்டுள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். நேற்று இரவு மண்டாடுவ பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு மீண்டும் வீடு திரும்புகையிலேயே அவர் கொலைசெய்யப்பட்டுள்ளதாக, விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இவர் தங்காலை - பஹலகொடுவ பகுதியைச் சேர்ந்த 21 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ள சடலம் பிரேதப் பரிசோதனைகளுக்காக ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கொலை செய்த சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை வீரகெடிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# சுவர் விழுந்து சிறுவன் பலி!

பதுளை, ஹாலிஎல பகுதியில் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் 4 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான். சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன், தனது தாத்தாவுடன் அவர்களது பெற்றோர் வருவதாகவும் அவர்களது பெற்றோர் இச்சம்பவத்தின் போது வீட்டில் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சிறுவனின் இறுதிக் கிரியைகள் நேற்று மொரகொல்ல பொது மயானத்தில் இடம்பெற்றது. (உ)

# நான் உத்தரவிடவில்லை



காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின், இயந்திரங்களை அகற்றுவதற்கோ அவற்றை பழைய இரும்புக்காக விற்பனை செய்வதற்கோ தாம் அனுமதி அளிக்கவில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். "காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை இயந்திரங்களை வெட்டி அகற்றுவதற்கு அனுமதி அளிப்பதற்கான எந்த ஆவணமும், கையெழுத்திடுவதற்காக வந்ததை நான் பார்க்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பாரிய ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்து விசாரிக்கு அதிபர் ஆணைக்குழுவிடம், தாக்கல் செய்துள்ள சத்தியக் கடதாசியிலேயே, கோத்தபாய ராஜபக்ச இவ்வாறு கூறியுள்ளார். முன்னாள் இராணுவத் தளபதி உள்ளிட்ட இரண்டு மூத்த இராணுவ அதிகாரிகள் மற்றும் மூத்த அரசாங்க அதிகாரி ஒருவருக்கு எதிராக கோத்தபாய ராஜபக்ச இந்த சத்தியக் கடதாசியைச் சமர்ப்பித்துள்ளார். (உ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 17.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.